[டாக்டர் மு. கருணாநிதி]

கடந்த ஐந்தாறு ஆண்டுக் காலம் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய எல்லாக் கோரிக்கைகளேயும் வரிசையாக 200 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக, 350 ரூபாயாக, பிறகு 450 ரூபாயாக ஆக்கி இருக்கிறோம். இன்னும் இரயில் பாஸ், பஸ் பாஸ் என்று கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். என்னுடைய ஒரேயொரு கோரிக்கையை மட்டும்—வறட்சி நிவாரணம் பற்றிச் சொல்கிறேன்— அதைத் தயவு செய்து மறுபரிசீலனை செய்யுங்கள்.

திரு முனு ஆதி : ஸ்கூட்டர் கேட்டிருந்தோம். டீசல் எஞ்சின்..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எம்.எல்.ஏக்கள் ஹெல்மெட்டைப் பாதுகாப்புக்காக போட வேண்டும் என்று சொன்னோம். அந்தக் கண்டிஷனோடு வந்தால் ஸ்கூட்டருக்கு முன் உரிமை தருவது பற்றி யோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. பொதுவாக இதில் வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுவதில்லை.

திருவாளர்கள் என். டென்னிஸ், கே. ஏ. வகாப், எம். சுரேந்திரன் கே. எஸ். கோதண்டராமையா, வி. கே. இராஜாப்பிள்ளை, திரு பி. வெங்கடசாமி, கே. டி. கே. தங்கமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன்னுள்ள கேள்வி :—

"நிதிக் கோரிக்கை எண். 7— மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 49,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

(8) அறிவிப்பு.

தமிழ்நாடு 1975-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.